**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>OS. 2/2024</u>**

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் PW.1 என்பவரின் சாட்சியாகிய நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10வது விதியின் படி) திரு.E.கோவிந்தராஜன் பென்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அன்பரசு | | விலாசம் |
| த/பெ | : கோவிந்தசாமி | | |
| வயது | : | | |
| மதம் | : | | |
| தொழில் | : | | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இவ்வழக்கில் நான் வழங்கிய அறிவுரையின் பேரில் தான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விவரங்கள் அறிந்துதான் கையொப்பம் செய்துள்ளேன். **வாதி தரப்பில் வா.சா.ஆ.21 முதல் 25 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்கிறேன்.** பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.21 உங்களது அப்பா கிரயம் பெற்றதற்காக தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண் 450/2ஏ ஆகும். மேற்படி சர்வே எண்ணுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சம்பந்தம் உண்டு. வழக்கில் சர்வே எண் சேர்த்து உள்ளீர்களா என்றால் சேர்த்துள்ளேன்.

வழக்கில் சேர்க்காமல் நீங்கள் பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. அந்த சொத்து எவ்வளவு என்றால் 68 சென்ட் ஆகும். மேற்படி சொத்து கடந்த 2021 அன்று நீங்கள் அனைவரும் சேர்ந்து விற்பனை செய்து விட்டீர்கள் என்றால் சரிதான் வா.சா.ஆ.22 அந்த விற்பனை செய்த ஆவணம் அதனால் அதனை தாக்கல் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். அதில் நீங்கள் கையொப்பம் போட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். அதற்கான பணம் நீங்கள் வாங்கிக் கொண்டீர்கள் என்றால் நான் பணம் வாங்கவில்லை. வாங்காமல் எதற்காக கையொப்பம் போட்டீர்கள் என்றால் வீடு விடுவேன் என்று சொன்னதற்காக நம்பி கையொப்பம் போட்டேன். வீடு கொடுப்பதாக எடுத்துப்பூர்வமாக எழுதிக் கொடுத்தார்களா என்றால் வாய்மொழியாக சொன்னார். அவ்வாறு உங்களிடம் யார் சொன்னார்கள் என்றால் என் அம்மா தான் என்னிடம் சொன்னார். என் அம்மா சொன்னதாக கிரயம் வாங்கியவர் என்னிடம் சொன்னார். சொத்து அந்த வீடு உங்கள் அம்மா பெயரில் இருக்கிறது என்றால் சரியில்லை கோவிந்தசாமி பெயரில் இருக்கிறது. உங்க அம்மாவிற்காக உயில் மூலமாக வந்த சொத்து என்றால் சரியில்லை. பட்டா மூலமாக வந்த சொத்து ஆகும். வா.சா.ஆ.25 கோவிந்தராஜ் பெயரில் ஒரு ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் அது என்ன சர்வே எண் என்றால் சர்வே எண் தெரியவில்லை. மேற்படி ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் பட்டா ஒரிஜினல் உள்ளது . வழக்கு சொத்து உங்கள் அம்மாவிற்கு உயில் மூலமாக கிடைத்த தனிப்பட்ட சொத்து அதில் உங்களுக்கு பங்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே

**வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை அப்பா பெயரில் பட்டா இருப்பதால் பாகம் உண்டு.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram